

தமிழகம் முழுவதும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் அடிப்படையில் பயனாளிகளுக்கு ஊட்டசத்து பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக திருச்சி உறையூர் மேட்டுத்தெரு அங்கன்வாடி மையத்தில் "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ஊட்டசத்து வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு பாலூட்டும் தாய்மார்களின் குழந்தைகளின் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் கீழ் 50 பாலூட்டும் தாய்மார்களுக்கான பேரிச்சம்பழம், நெய் விட்டமின், டானிக், புரதச்சத்து பவுடர், அடங்கிய ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார். இந்நிகழ்வில் திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப்குமார், மாநகராட்சி ஆணையர் சரவணன், மேயர் அன்பழகன் உட்பட அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி முன்னிலையில் திருவெண்ணைநல்லூர் பேரூர் அதிமுக முன்னாள் நகர செயலாளர், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் கே சரவணகுமார் தலைமையில் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் அரங்கராஜன், ரகு, விருத்தாம்பாள் நாவன், அறிவழகன், அ.தி.மு.க. நிர்வாகிகள் முருகன், கௌசல்யா, ஏகாம்பரம், அரி கிருஷ்ணன், சரவணன், சங்கர், வனஜா ஏகாம்பரம் , ரமேஷ், அமுதா, முருகன், சண்முகம், ஜைனுல் உசேன், சக்திவேல், மோகன் ஆகியோருடன் 200க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர். மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்கௌதம சிகாமணி அனைவரையும் வரவேற்றார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா இளந்திரையன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர் சு விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம் சிவசக்திவேல், பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன், துணைத்தலைவர் ஜோதி, உள்ளிட்ட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடலூர் மாவட்டத்திற்கு வருகை!

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி. வெ.கணேசன் அறிக்கை!



*கடலூர் நவ.17.*

துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை தருவதை குறித்து மாவட்டச் செயலாளர்-தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

24.11.2024 மற்றும் 25.11.2024 ஆகிய இரண்டு நாட்கள் அரசு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள்.

அதுசமயம் கடலூர் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக , கிளை கழக, வார்டு கழக, செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிகள், தொ.மு.ச நிர்வாகிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்றத் தொகுதியில்

# பல்வேறு துறைச்சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது!

*நீலகிரி, நவ.17-*

நீலகிரி மாவட்டம், கூடலூர், கிராண்ட் வியூ ஹோட்டலில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில், கூடலூர் சட்ட மன்றத் தொகுதியில் ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம், கலைஞரின் கனவு இல்லத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், ஊராட்சிகளில் விளையாட்டு மைதானம், ஊரக பள்ளிகளில் சுற்றுச் சுவர் அமைத்தல், ஊரக பகுதிகளில் முழுநேர நியாய விலை கடை கட்டுதல், புதிய குளம் அமைத்தல், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் உள்ளிட்டவை குறித்தும், பொதுப் பணித்துறையின் சார்பில் கூடலூர் தலைமை மருத்துவமனை வலுப்படுத்த கூடுதல் கட்டடம் கட்டும் பணி உள்ளிட்ட பணிகள் குறித்தும், பேரூராட்சிகள்துறை சார்பில் நமக்கு நாமே திட்டம், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் உள்ளிட்டவை குறித்தும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் முதலமைச்சர் பெண்குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம் உள்ளிட்டவை குறித்தும், நகராட்சி நிர்வாகம் சார்பில் நமக்கு நாமே திட்டம், 15வது நிதிக்குழு மானியத்திட்டம், தூய்மை பாரத திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்தும், நெடுஞ்சாலைத்துறை சார்பில் நடைபெற்று வரும் சாலைப்பணிகள் விவரங்கள் குறித்தும், ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு திட்டம் குறித்தும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் சார்பில் அங்கன்வாடி மையங்கள் குறித்து துறைச் சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் (15.11.2024) நடை அன்று பெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது:

கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூடலூர் மற்றும் நெல்லியாளம் நகராட்சிப்பகுதிகள், ஓவேலி தேவர்சோலை மற்றும் நடுவட்டம் ஆகிய பேரூராட்சிப் பகுதிகள் மற்றும் முதுமலை, மசினகுடி, சேரங்கோடு, ஸ்ரீமதுரை, நெலாக்கோட்டை ஆகிய ஊராட்சிப்பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை உரிய நேரத்தில் முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். பெரும்பாலான பணிகள் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஒருசில பணிகள் விரைவாக முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல் தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நிவர்த்தி செய்ய நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மக்கள் பயனடையும் வகையில் அரசின் திட்டங்களை உரிய காலத்திற்கு செய்து முடித்திட அலுவலர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், அமைச்சர் மகளிர் திட்டத்தின் சார்பில் 5 பயனாளிகளுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.3 இலட்சத்திற்கான கடனுதவி களையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு சிப்பம் கட்டும் அறை அமைக்க ரூ.2 இலட்சம் பெறுவதற்கான ஆணையினையும், 2 பயனாளிகளுக்கு நிழல் வலை குடில் அமைக்க ரூ.5,32,500 பெறுவதற்கான ஆணையினையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் ரூ.5,000 மதிப்பில் மருந்து பெட்டகங்களும், 5 பயனாளிகளுக்கு ரூ.10,000 மதிப்பில் ஊட்டச்சத்து பெட்டகங்களும், 4 பயனாளிகளுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டைகளையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 31 பயனாளிகளுக்கு ரூ.1.55 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குடும்ப அட்டைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையாக ரூ.85,000ஃமும் என மொத்தம் 58 பயனாளிகளுக்கு ரூ.32.87 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.





ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று அந்த இடத்தில் ரவுண்டானா அமைப்பது பற்றி தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி நெடுஞ்சாலை துறை அதிகாரிகளின் ஆலோசனைகளை கேட்டறிந்து, ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஜவகர், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் மரு.மணீஷ், மாநகராட்சி துணை மேயர் வி.செல்வராஜ், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, பகுதி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. மகளிர் தொண்டர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

9 ஆம் பக்கத் தொடர்ச்சி

### சூளகிரி தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - எஸ். ராஜாத்தி அகரம், முருகர் கோவில் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். நிஷா பாளையதிம்மனப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) எம். ராமாயி இந்திரா நகர், அகரம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) காந்தம்மா இந்திரா நகர், அகரம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) ரசிதா சர்தார் அண்ணா நகர், சூளகிரி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) அமுதா காமராஜ் நகர், சூளகிரி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### கெலமங்கலம் கிழக்கு ஒன்றியம்

தலைவர் - சாவித்ர 3/147, குட்டூர் கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணைத் தலைவர் - சத்யா 2/48, குட்டூர் கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

அமைப்பாளர் - லட்சுமி 132, குட்டூர் கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) சிவரஞ்சினி 2/207, சஜ்ஜலப்பட்டி கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம். 2) காந்தா 100/1, குட்டூர் கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம். 3) கவிதா 2/186, சஜ்ஜலப்பட்டி கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம். 4) சத்யா 7/40, குரம்பட்டிகிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம். 5) சென்னம்மாள் சஜ்ஜலப்பட்டி கிராமம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

### தளி வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - எ. வெங்கடலட்சுமி பென்னங்கூர் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வி. மஞ்சுலம்மா பென்னங்கூர் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) சந்தியா பென்னங்கூர் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) எஸ். மஞ்சுளா பென்னங்கூர் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) மீனா மல்லசந்திரம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) கௌரம்மா பண்டேஸ்வரன் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### தளி தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ஜோதி கக்கதாசம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) அமராவதி அகலக்கோட்டை கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) சுதா அன்னியாளம் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) நாராயணம்மா தொட்டி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) புஷ்பா தொட்டி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) தமிழ்செல்வி திம்மனட்டி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### அஞ்செட்டி ஒன்றியம்

அமைப்பாளர் - சுசிலா தேவன்கவுண்டன் தொட்டி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கிருஷ்ணம்மா அஞ்செட்டி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) மீனா சிங்கோட்டை கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) அனுசுயா சவுள்பையில் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) சத்யா புதூர் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) பெரியம்மா புதூர் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### கெலமங்கலம் மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - எம். லலிதா நெருப்புகுட்டை கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மாலதி மஹாலட்சுமி நகர், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) ஜோதி பெரியபூதுகோட்டை கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) யசோதா பெரிய பூதுகோட்டை கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) கனகவதி சாபரானப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) ரத்தினம்மா சாபரானப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### தேன்கனிக்கோட்டை பேரூர்

அமைப்பாளர் - டி. சித்ரா அஞ்செட்டி சாலை, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். ராஜம்மா அண்ணா நகர், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம். 2) பவித்ரா அண்ணாநகர், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம். 3) சி. சுஷ்மா எ.வி.எஸ். விலாஸ், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

### கெலமங்கலம் பேரூர்

அமைப்பாளர் - மும்தாஜ் ஜீவா நகர், கெலமங்கலம், கிருஷணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) முருகம்மா பட்டாளம்மன் தெரு, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) சல்மா யாரப் அண்ணா நகர், கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) ஆமீனா ஜீவா நகர், கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### ஒசூர் கிழக்கு பகுதி

அமைப்பாளர் - பர்வின் வ.ஊ.சி. நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பிரியா சானசந்திரம், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) கீர்த்தனா திரு.வி.க. நகர். ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) திவ்யா திரு.வி.க. நகர். ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) சரஸ்வதி திரு.வி.க. நகர். ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) எம். சகுந்தலா திரு.வி.க. நகர், ஒசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்.

### ஒசூர் மேற்கு பகுதி

அமைப்பாளர் - ரம்யா ஸ்டார் என்.கே.லேவ், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மணியம்மாள் பேடரப்பள்ளி, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) பிரேமலதா முனிதேவி நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) அபிராமி கோல்டன் சிட்டி, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) ரமணி, பாலாஜி நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### ஒசூர் வடக்கு பகுதி

அமைப்பாளர் - சுகந்தி நேதாஜி நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆனந்தி கிருஷ்ணா நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 2) எம். சித்ரா கிருஷ்ணா நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) பேபி கலைஞர் நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) ஜோதி கலைஞர் நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) விசாலாட்சி கலைஞர் நகர், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

### ஒசூர் தெற்கு பகுதி

அமைப்பாளர் - மஞ்சுளாதேவி டைட்டான்,ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஜோதி, அந்திவாடி ஒசூர் கிருஷ்ணகிரி மாவட்டம். 2) நக்மா அந்திவாடி, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 3) நஞ்சம்மா அந்திவாடி, ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 4) லட்சுமி டைட்டான், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். 5) பத்மபூரணி டைட்டான், ஒசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 11.11.2024

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி



நீலகிரி மாவட்டம், கூடலூர், கிராண்ட் விய ஹோட்டலில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்மு.பெ.சாமிநாதன் (15.11.2024) அன்று பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அரசு தலைமைக் கொறடாகா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு , கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ் உட்பட பலர் உள்ளனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் இளைஞரணி செயலாளரும். துணை முதல்வர். இளம் தலைவர். உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள். நவம்பர் 27ல் மாவட்டம் முழுவதும் எழுச்சியுடனும், நலத்திட்டங்கள் வழங்கி கொண்டாட முடிவு மாவட்ட கழக செயலாளர். இரா. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது மற்றும் மாவட்ட நிர்வாகிகள். மு.கார்த்திகேயன், தலைமை செயற்குழு உறுப்பினரகள் சி.ராஜேந்திரன், கே.டி.மணி தாமரைக்கண்ணன், மேயர். ஆ ராமச்சந்திரன், மாநகர செயலாளர். பா.ரகுபதி, அவைத்தலைவர். கே.ஆர். முருகன் உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.